# தீபாவளி தினத்தன்று இடம்பெயர்ந்த மக்களின் நலன் வேண்டி சிறப்புப் பிரார்த்தனை
# All Ceylon Hindu Congress Conducts Prayer for IDPs on Deepavali Day

அகில இலங்கை இந்து மாமன்றம் அதன் அங்கத்துவ சங்கங்களுடனும், ஏனைய இந்து நிறுவனங்களுடனும் இணைந்து தீபாவளி தினமாகிய இம்மாதம் 17ம் திகதி சனிக்கிழமையன்று காலை 10.00 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பிரார்த்தனை நிகழ்வொன்றை நடத்தவிருக்கிறது.

பலவித இழப்புகளுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் மத்தியில் துயரங்களுடன் வாடிநந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு விமோசனமும், வாழ்வில் நிம்மதியும், மகிழ்ச்சியும் அமைந்த சிறப்பான எதிர்காலத்திற்கு இறையருளை வேண்டி இந்தப் பிரார்த்தனை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அமெரிக்கா, ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

இந்து மக்கள் அனைவரையும் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொள்ளும்படி அகில இலங்கை இந்து மாமன்றம் கேட்டுக் கொள்கின்றது.

* * * * * * * * *

ACHC Prayer in Colombo: 2009 October 07